**செய்தி வெளியீடு எண் : 516** **நாள்: 01.04.2022**

# <u>செய்தி வெளியீடு</u>

சேர்க்கைக்கான தகுதி சதமான மதிப்பெண்களை கீழ்க்கண்டவாறு ஒன்றிய அரசின் ஆயுஷ் துறை குறைத்துள்ளதன் அடிப்படையில், தமிழ்நாடு சுயநிதி இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி (சிறுபான்மையினர்/ சிறுபான்மையினரற்ற) மருத்துவக் கல்லூரிகளில் 2021-22 ஆம் கல்வியாண்டிற்கான பி.எஸ்.எம்.எஸ்/பி.ஏ.எம்.எஸ்./பி.எச்.எம்..எஸ். மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கு அரசு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் முதற்கட்ட கலந்தாய்விற்குப் பிறகு மீதமுள்ள காலி இருக்கைகளுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தேர்வு அல்லது அதற்கு இணையான கல்வி வாரியத் தேர்வில் (அறிவியல் மற்றும் ஆங்கிலத்தை பாடங்களாக கொண்டு) தேர்ச்சி பெற்று, 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் (NEET U.G.2021) கலந்து கொண்டு தகுதிக்கு தேவையான சதமான மதிப்பெண்களை பெற்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

| வகுப்பு | AS&H UG பட்டப்படிப்பு பிரிவுகளுக்கான சேர்க்கைக்கு **விண்ணப்பிக்கத் தேவையான** NEET (UG) 2021-ல் பெற்ற தகுதி மதிப்பெண்கள் வீச்சு **(முன்னர் அனுமதிக்கப்பட்டது)** | AS&H UG பட்டப்படிப்பு பிரிவுகளுக்கான சேர்க்கைக்கு **விண்ணப்பிக்கத் தேவையான** NEET (UG) 2021-ல் பெற்ற தகுதி மதிப்பெண்கள் வீச்சு **(தற்போது குறைக்கப்பட்டது)** |
|---|---|---|
| OC | 720-138 | 137-122 |
| OBC | 137-108 | 121-096 |
| SC | 137-108 | 121-096 |
| ST | 137-108 | 121-096 |

**(மேலும் அடிப்படைக் கல்வி தகுதி மற்றும் ஏனைய பிற விவரங்களுக்கு வலைதள அறிவிக்கையை பார்க்கவும்).** விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை 01.04.2022 முதல் 08.04.2022 பிற்பகல் 05.00 மணி வரை மட்டும் எங்களது அலுவலக வலைதளமான "www.tnhealth.tn.gov.in" பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், விரிவான வலைதள அறிவிக்கை, மேற்கண்ட படிப்புகளுக்கான சுயநிதி சிறுபான்மையினர்/ சிறுபான்மையினரற்ற இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளின் விவரம், தகவல் தொகுப்பேடு, பொது விண்ணப்ப பதிவிறக்கம் மற்றும் அதற்குரிய கட்டணம், குறைந்தபட்ச தகுதி சதமான மதிப்பெண்கள், பட்டப்படிப்புகளின் பிரிவுகளின் விவரம், அடிப்படை தகுதி, கல்விக் கட்டணம் மற்றும் இதர விவரங்களுக்கு "www.tnhealth.tn.gov.in" என்ற வலைதளத்தை தொடர்பு கொள்ளலாம்.

| | |
|---|---|
| விண்ணப்ப படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை பதிவிறக்கம் செய்யும் காலம் | 01.04.2022 முதல் 08.04.2022 பிற்பகல் 05.00 மணி வரை |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் (அஞ்சல் /கூரியர் மூலமாகவோ / நேரடியாகவோ) | 08.04.2022 பிற்பகல் 05.00 மணி வரை |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in